**இலங்கை தேயிலைச் சபை - 2021**

**..........................................................**

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தேயிலைச் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ................................... | ............................. | ............... |
| (அ) சபையினால் மீளாய்வாண்டில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்த ரூபா 150,717,224 கிரயமான மோட்டார் வாகனங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், | கட்டிடங்களை மீள்மதிப்புச் செய்யும் நடவடிக்கையானது அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தினால் செய்யப்படுவதுடன் | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட் காலத்தினை மீண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக உபகரணங்கள், இயந்திரங்களும் உபகரணங்களும், நீர் மற்றும் மின்சார உபகரணங்கள், கட்புலனாகாத சொத்துக்கள், அலுவலக உபகரணங்கள், கணனி உபாகரணங்கள், தளபாடங்களும் பொருத்திகளும், நூல் நிலையப் புத்தகங்கள் என்பன தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் அச்சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலத்தினை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தை தவிர்த்து கட்டிடம் அமைந்துள்ள காணிகளுக்காக குத்தகை உடன்படிக்கை அமுல்ப்படுத்தப்படுவதுடன் குத்தகை கால முடிவில் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகனங்களை மீள்மதிப்புச் செய்தலானது ஒரு தனியார் நிறுவனத்தின் மூலம் இடம்பெறுகின்றது. ஆய்வுகூட உபகரணங்கள் மாத்திரம் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் மீள்மதிப்புச் செய்தலானது மேற்கொள்ளப்படுகின்றது. அறிக்கை கிடைத்ததன் பின்னர் உரிய அனைத்து தகவல்களையும் நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குதல் இடம்பெறும். ஏனைய சொத்துக்கள் சபையின் தகமைபெற்ற உள்ளகக் குழுவின் மூலம் எதிர்காலத்தில் மீள்மதிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் ரூபா 350,000,000 பெறுமதியாக் காட்டிய தலைமை அலுவலகத்தின் காணி 2008 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னரும் ரூபா 26,300,000 பெறுமதியாகக் காட்டிய கம்பொளை பிராந்திய அலுவலகம் அமைந்துள்ள காணி 2016 யூலை 25 ஆந் திகதியின் பின்னரும் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் மீள்மதிப்புச் செய்து நிதிக்கூற்றுக்களுக்கு | தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணி அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் தற்பொழுது மீள்மதிப்புச் செய்யப்பட்டு அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அதன் அறிக்கை கிடைத்த உடன் நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய இரண்டு காணிகளும் மீள்மதிப்புச் செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் பிரகாரம் ஓய்வூதிய நலன்பொறுப்பினை கணக்கீடு செய்வது சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்பட்ட அலகுக் கடன் (PUC) முறைமை பின்பற்றப்பட்டிருந்தும் 2019 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற காப்பீட்டு மதிப்பீட்டின் சிபாரிசினை அடிப்படையாகக் கொண்டு நிதி ஆண்டின் இறுதியின் போது நிகழ்கால சேவைக்கிரயம் மற்றும் வட்டிக் கிரயத்தின் பிரகாரம் இனங்காணப்பட வேண்டிய ரூபா 9,459,950 ஊழியர் பனிக்கொடைக்கான செலவு மற்றும் ஓய்வூதிய நலன்களின் அடிப்படையில் உள்ளபடியான இலாபமாகிய ரூபா 8,502,945 பெறுமதியானது ஏனைய விபரமான வருமானக் கூற்றில் காலரீதியாக இனங்காணப்படாமை அவதானிக்கப்பட்டது. மேலும் இப்பொறுபுக்களைத் தீர்த்துவைப்பதற்கு போதியளவு முதலீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் மூலம் சிபார்சு செய்யப்பட்டவாறு ஓய்வூதிய பிரதிபலன் பொறுப்பு சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்பட்ட அலகுக் கடன் முறைமையின் பிரகாரம் ஓய்வூதிய பிரதிபலன் பொறுப்பு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும், நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள் 2022 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படுவதுடன், ஓய்வூதிய நலன் பொறுப்பிற்காக நிரந்தர முதலீட்டினை மேற்கொள்வதற்கும் முறையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | ஓய்வூதிய பிரதிபலனின் அடிப்படையில் உள்ளபடியான இலாபம்.˙.நட்டத்தை காலரீதியாக இனங்காணல் வேண்டும். பொறுப்புக்களுக்காக போதியளவு முதலீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஈ) | காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வரிக்கு முன்னைய இலாபத்திற்கு செம்மையாக்கல்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் சபையினால் வரி செம்மையாக்கல்களின் பின்னர் இலாபத்திற்கு செம்மையாக்கப்பட்டிருந்த து. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை இதன் பின்னர் காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரித்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ................................... | ............................ | ............... |
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இலங்கை வங்கி கொள்ளுபிட்டி இரண்டாவது கிளையிலும் இலங்கை வங்கி பம்பலபிட்டிய கிளையிலும் வாடிக்கையாளர்களினால் நேரடியாக வைப்புச்செய்யப்பட்ட முறையே ரூபா 6,391,886 மற்றும் ரூபா 7,307,960 பணத்திற்கான வருமான நிதி மூலத்தினை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. இதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 13,699,846 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. மேற்கூறிய கொள்ளுபிடியின் இரண்டாவது கிளையில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற வங்கித் தவறுகளாக ரூபா 392,673 காட்டப்பட்டிருந்தும் 2022 ஏப்ரல் 30 கணக்காய்வுத் திகதி வரையும் அத்தவறு சரி செய்யப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் வாடிக்கையாளர்களின் பணம் அனுப்புதல்களை வங்கியில் நேரடியாக வைப்புச் செய்வதற்கும் அப்பற்றுச் சீட்டின் பிரதியை இலங்கை தேயிலை சபையின் தனியான ஈமெயிலின் மூலம் அனுப்புவதற்கும் வாடிக்கையாளர்களுக்கு தெளிவாக ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் அவர்கள் அந்த பற்றுச்சீட்டினை சரியான முறையில் தேயிலைச் சபைக்கு ஈமெயில் செய்யப்படாததன் அடிப்படையில் இரண்டு வங்கிக் கணக்குகளின் நேரடி வைப்புக்களின் அளவினை இனங்காண முடியாதிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது தேடிக் கண்டு பிடிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் இந்த ஆண்டின் போது தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்பட்டன. 2020 ஆம் ஆண்டில் ரூபா 489,319 மற்றும் இன்னும் இனங்காணப்படாத நேரடி வைப்புக்களை இனங்காண்பதற்கு தேவையான முயற்சிகள் எடுக்கப்படும். மேலும் வங்கித் தவறாகக் காட்டப்பட்டுள்ள ரூபா 392,673 பணம் தற்பொழுது தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. | நேரடி வைப்பக்கள் சம்பந்தமாக வருமான மூலங்களை துரிதமாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். வங்கியினால் மேற்கொண்ட தவறினை உடனடியாக சரிசெய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொழும்பு தலைமை அலுவலகத்தில் மத்தியப்படுத்தப்பட்ட வாயு சீராக்கி முறைமையை ஸ்தாபிக்கும் ஒப்பந்தத்தின் தொடக்க முற்பணமாகிய ரூபா 6,951,410 தொகையை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தும் போது கழிக்கப்பட்டிருந்தும் வேலையை ஆரம்பித்தல் முற்பணக் கணக்கில் அதற்கிணங்க தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | மத்தியப்படுத்தப்பட்ட வாயு சீராக்கி முறைமைக்கான இறுதிக் கொடுப்பனவு 2022 மே மாதம் 04 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அக்கொடுப்பனவின் போது சரியாக கணிப்பீடு செய்து வேலை ஆரம்பிக்கும் முற்பணங்கள் கணக்கு தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தக்காரருக்கான கொடுப்பனவின் போது வேலை ஆரம்பிக்கும் முற்பணத்தை எதிரீடு செய்து கணக்கை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,200,041 தொகையான இனங்காணப்படாத மீதி காணப்பட்டதுடன் அதனை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக கடன்பட்டோர் மீதியும் வருமானமும் அத்தொகையால் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கட்டுப்பாட்டுக் கணக்கினை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இனங்காணப்படாத மீதியாகிய ரூபா 455,133 பணத்தை இனங்காண்பதற்கு மேலும் 2022 ஆம் ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | இனங்காணப்படாத மீதிகளை துரிதமாக இனங்கண்டு உரிய வகையில் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | சபைக்கு மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய வழிச்சரக்கு மீதியான ரூபாா 2,434,872 தொகையில் ரூபா 1,869,582 தொகை 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் மீதி என அவதானிக்கப்பட்டதுடன் அதில் ரூபா 429,229 தொகையான இருப்பு ஆய்வு கூட பயன்பாட்டிற்கு கட்டளையிடப்பட்டுள்ள ஆய்வுகூட பொருட்கள் எனவும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிட்ட 12 மாதங்களுக்கு மேற்பட்ட கிடைக்க வேண்டிய பொருட்களுக்கான மீதிகளுக்கு மத்தியில் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக காணப்பட்ட பயணக் கட்டுப்பாடு மற்றும் இறக்குமதி மட்டுப்பாட்டின் காரணமாக 2020 ஆம் ஆண்டில் கட்டளையிடப்பட்டுள்ள இப்பொருட்கள் இலங்கை தேயிலைச் சபைக்கு வழங்குவதற்கு வழங்குனர்கள் தவறியிருந்தார்கள். அதற்கிணங்க உரிய பொருட்களின் | நீண்டகாலமாகக் காணப்பட்ட வழிச்சரக்கு மீதிகளை உரிய காலத்தில் பின்தொடர் நடவடிக்கை எடுத்து கணக்குகளில் செம்மையாக்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கட்டளையிடல் பத்திரங்களை செல்லுபடியற்றதாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (உ) தேயிலை தொழிற்சாலைகளை மூடுதல் பதிவினை இரத்துச் செய்தல் ஒப்பந்த நடவடிக்கைகளையும் ஏனைய சேவைகளினதும் பிரச்சினைகள் சம்பந்தமாக மூன்றாந் தரப்பினர்களால் சபைக்கு எதிராகத் தெடுக்கப்பட்ட மற்றும் சபையினால் தொடுக்கப்பட்ட 23 வழக்குகள் மீளாய்வாண்டில் விசாரிக்கப்பட்டு வருவதுடன் 2021 யூலை 27 ஆந் திகதி வெளியிடப்பட்ட சமரசம் செய்தல் வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் சபையினால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 485,232 தொகையான இழப்பீட்டுப் பணத்தை செலுத்துவதற்கு தீர்ப்பு அளிக்கப்பட்டது. இது சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை தேயிலை சபையினால் எதிராளிக்குச் செலுத்த வேண்டிய பணம் ரூபா 485,232 ஆக இருந்ததுடன் இணக்கசபைக்கு அனுப்பிவைப்பதன் மூலம் இப்பெறுமதியை தீர்மானிக்க கூடியதாக இருக்கலாம். | செலுத்துவதற்கு தீர்ப்பளிக்கப்பட்ட இழப்பீட்டுப் பணம் சம்பந்தமமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். வழக்கு சான்றுப் பொருட்களை குறைக்கும் வகையில் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ................................... | ............................. | ............... |
| (அ) முன்னாள் அமைச்சரினையும் அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளரினையும் உள்ளடக்கி வரையறுத்த களுபோவிடியான தேயிலை தொழிற்சாலை கம்பனியின் உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பணத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,289,086 தொகை 03 ஆண்டுகளிலிருந்து 05 | முன்னாள் அமைச்சர் மற்றும் மேலதிக செயலாளரின் வெளிநாட்டு பயண செலவுக்கான ரூபா 957,832 பணம் தேயிலை அபிவிருத்தி செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டது. வரையறுத்த களுபோவிடியான தேயிலை தொழிற்சாலையிலிருந்து அறவிட வேண்டிய அதன் | அமைச்சின் மற்றும் வெளித்தரப்பினர்களின் பயணச் செலவுகளுக்காக செலவு செய்யப்பட்ட இப்பணத்தினை துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகள் வரையான காலமாகவும் சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பயணத்திற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 317,232 தொகை 02 ஆண்டுகளிலிருந்து 03 ஆண்டுகள் வரையான காலமாகவும் கிடைக்க வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் 2022 எப்ரல் 30 கணக்காய்வுத் திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னாள் தலைவரின் விமான டிக்கட்டிற்கான ரூபா 252,054 பணம் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. ரூபா 79,200 பணம் களுபோவிடியான தேயிலை தொழிற்சாலையிலிருந்து கிடைக்க வேண்டியுள்ளது. சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 317,252 பணத்தை அறவீடு செய்வதற்காக கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அவரின் பணிப்பாளர் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள உரிய பணத்தை தீர்த்து வைக்குமாறு தெரியப்படுத்தப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் போது இப்பணத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கிறேன். | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது உலகளாவிய தேயிலை உபசரிப்பிற்காக வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கு வழங்கிய ரூபா 51,604,457 பணத்தில் 15 நாடுகளின் சேமிப்பாகிய ரூபா 918,679 பணம் மீளாய்வாண்டின் இறுதிவரை பெற்றுக்கொள்ளப்படவில்லை. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 வெளிநாட்டு தூதுவராலயங்களிடமிருந்து அறவிட வேண்டிய பணம் தற்பொழுது வெளிநாட்டு விவகார அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் வெளிநாட்டு விவகார அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த முற்பணத்தை தீர்த்துவைத்தல் வேண்டும். |
| (இ) | சீனா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மன் மொஸ்கோ ஆகிய வெளிநாடுகளிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 868,578 பணம் உரிய தூதுவராலங்களிடமிருந்து இலங்கையின் வெளிவிவகார அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரை அந்த அமைச்சிடமிருந்து பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை | இலங்கை தேயிலை சபைக்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறிவிட வேண்டிய மொத்த பணத்தை அறவீடு செய்வதற்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது பல தடவைகள் வேண்டுகோள்விடுக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது. வெளிவிவகார அமைச்சு இது தொடர்பாக வெற்றிகரமான பதிலை | இலங்கை வெளிவிவகார அமைச்சிடமிஜருந்து துரிதமாக பணத்தை அறவீடு செய்வதற்கு பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்களால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இன்றுவரை வழங்கியிருக்கவில்லை. | |
| (ஈ) | கிடைக்க வேண்டிய மீதியினுள் உள்ளடக்கப்பட்ட ரூபா 679,123 பெறுமதியான “சிலோன் தேயிலை” என்ற வியாபாரக் குறியுடனான இலங்கை கிரிகட் ரீ சேட்களின் விற்பனை தொடர்பாக கிடைக்க வேண்டிய மீதி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டுக் காட்டப்பட்டதுடன் 2022 ஏப்ரல் 30 கணக்காய்வுத் திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 679,123 பெறுமதியான இலங்கை உத்தியோகபூர்வ ரீ சேட்டுக்களின் பெறுமதி 2013 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வருபவையாகும். வெளிநாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ ரீ சேட்டுக்களுக்காக கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு செய்தல் நடைமுறையில் சிக்கலானதாகும். இப்பணத்தை நட்டமாக பதிவழிப்பதற்கு பணிப்பாளர்கள் சபைக்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்படும். | கிடைக்க வேண்டிய மீதியை பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |
| (உ)) | ஐக்கிய அரபு எமிரெட் இராஜியத்தின் வெளிநாட்டு துாதுவராலயத்திடமிருந்தும் மொஸ்கோ வெளிநாட்டு துாதுரவலாயத்திடமிருந்தும் 2010 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிலிருந்து கிடைக்க வேண்டிய பாதுகாப்பு வைப்புக்கள் முறையே ரூபா 249,130 மற்றும் ரூபா 203,847 பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஐக்கிய அரபு எமிரெட் இராஜியத்தின் தேயிலை மேம்பாட்டு பிரிவின் முன்னாள் உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்காகச் செலுத்தப்பட்ட முற்பணத்தை அறவீட செய்தல் நடைமுறையில் சிக்கலானதாக இருந்ததனால் இப்பணத்தை நட்டமாக பதிவழிப்பதற்காக அடுத்துவரும் பணிப்பாளர் சபைக்கு அனுப்பிவைத்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கிடைக்க வேண்டிய மீதியினை பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | 2019 ஆம் ஆண்டின் போது பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளின் தொழிலாளர்களுக்கு தீபாவளி விழா முற்பணத்தை செலுத்துவதற்கான ரூபா 8,760,400 கடன் பணமானது எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு சபையின் தேயிலை மேம்பாட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டது. இந்த | தீபாவளி விழாவிற்காக எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு வழங்கப்பட்ட பணத்தை தீர்த்துவைப்பதற்கு பல சந்தர்ப்பங்களில் தெரியப்படுத்தியிருந்த போதிலும் அதற்காக சிறந்த பதில் கிடைத்திருக்கவில்லை. அப்பணத்தை துரிதமாக தீர்த்துவைக்குமாறு | பெருந்தோட்டக் கம்பனியிடமிருந்து அல்லது பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முற்பணத்தை செலுத்தி 02 ஆண்டுகள் மிகைத்திருந்தும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்மீதியில் எப்பணத்தையும் அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (எ) | சீனாவிலுள்ள தேயிலை மேம்பாட்டு பிரிவிற்கு 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு சீனா அரசாங்கத்தின் மூலம் சீனா தூதுவராலயத்திற்கு மீளச் செலுத்தப்பட்ட ரூபா 889,870 தொகை (RMB 33,389.74) 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இப்பணம் சீனா தூதுவராலயத்தினால் வெளிநாட்டு விவகார அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக பல சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு விவகார அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் அவர்கள் அப்பணத்தை அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. வெளிநாட்டு அமைச்சிள் பிரதம கணக்காளரினை சந்தித்து இது சம்பந்தமாக உரிய பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை வெளிநாட்டு விவகார அமைச்சிடமிருந்து துரிதமாக பணத்தை பெற்றுக்கொள்வதற்கு பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்களால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணம் அனுப்புதல்களின் பகுப்பாய்வின் போது நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை ஆகிய நிறுவனங்களுக்கு நிதியத்தினால் வழங்கப்பட்ட ரூபா 1,209,000,000 அறவீடு செய்வதற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள பணத்தை மீண்டும் அறவீடு செய்வதற்கும் ஒரு கடிதத்தினை அனுப்புவதற்கும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்டுள்ள நிதியை பெற்றுக்கொள்வதற்கு இரு தரப்பினர்களுடனான ஒரு கலந்துரையாடலினைக் கோருவதற்கும் அமைச்சு செயலாளரினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | உரிய தரப்பினர்களிடமிருந்து கடன் பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | | | |
|---|---|---|---|
| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
| ................................... | | ............................. | ............... |
| (அ) | தேயிலை தொழிற்சாலை | பசுமையான தேயிலையை | செலுத்த வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | உரிமையாளர்களால் பசுமைத் தேயிலை வழங்குனர்களுக்குச் செலுத்துவதற்கு சபையில் வைப்புச் செய்யப்பட்டுள்ள வைப்பு பணத்தை முறைப்படியாகத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 1 ஆண்டிலிருந்து 19 ஆண்டுகள் வரை அதாவது 2000 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக தீர்த்துவைக்கப்படாத வைப்புக்களின் அளவு ரூபா 6,908,583 ஆகும். அது மொத்த வைப்புத் தொகையான ரூபா 8,935,369 இல் 77 சதவீதமாகும். இதற்கிணங்க பரீட்சிப்புக்களின் பின்னர் இப்பணத்தை செலுத்தி பூர்த்திசெய்தல் அல்லது நலன்பெறுனர்கள் இல்லையாயின் மீண்டும் வைப்பாளர்களுக்கு பணத்தை திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய வைப்புப் பணம் தொடர்பாக பரீட்சிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன. அதன் செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபைக்குத் தெரியப்படுத்தி 2000 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான வைப்பு வேண்டுதல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் மீளச் செலுத்தும் அடிப்படையில் வருமானத்திற்கு மீண்டும் எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தரப்பினர்களை சரியாக இனங்கண்டு துரிதமாக தீர்த்துவைத்தல் வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டில் தேயிலை கொழுந்துகளுக்காக ஆகக்குறைந்தது. ரூபா 80 விலையினைப் பேணுவதற்காக கொழுந்து வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்யும் வகையில் சபைக்கு திறைசேரியிடமிருந்து கிடைத்த நிவாரணப் பணத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படாது சேமிக்கப்பட்ட ரூபா 912,229 தொகையினை உடன்படிக்கையின் பிரகாரம் திறைசேரிக்கு அனுப்பிவைப்பதற்கு கணக்காய்வுத் திகதிவரை | பச்சைத் தேயிலைக் கொழுந்துகளுக்காக ரூபா 80 விலையினைப் பேணுவதற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த நிவாரணப் பணத்தில் சேமிக்கப்பட்ட ரூபா 912,229 பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு தகமை பெற்றிருக்காததனால் பெருந்தோட்ட அமைச்சினூடாக நிதி அமைச்சிற்கு அனுப்பிவைப்பதற்கு காசேலையின் மூலம் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கிறேன். | மிகுதி நிவாரண பணத்தை திறைசேரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| ……………….............. | | ……………….. | ………………….. | ……............ |
| (அ) | 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபை அதிகாரச் சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகள் | அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் சுங்கத் திணைக்களத்தினால் அறவிடப்பட்ட செஸ்வரி தேயிலைச் சபையின் நிதியத்திற்கு செலவுவைக்கப்பட வேண்டிய போதிலும் நேரடியாக பொதுத்திறைசேரிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | பொதுத்திறைசேரியினால் இலங்கை சுங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த கட்டளையின் பிரகாரம் இந்த செஸ் வரிப் பணம் நேரடியாக திறைசேரியினால் சேகரிக்கப்படும். | அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 715(2)(இ) | பொருட்களை பொறுப்பேற்றல், பொறுப்பில் வைத்திருத்தல், வழங்குதல் ஆகிய செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ள களஞ்சிய பொறுப்பாளரினால் பொருட்களைப் பெறுதல் வழங்குதல் முறைமை சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட வகையில் பதிவேடுகளையும் கணக்குகளையும் பேணவேண்டிய போதிலும் 2021 ஏப்ரல் 09 ஆந் திகதியிலிருந்து அத்திகயில் காணப்பட்ட பௌதீக இருப்பு மீதியினைக் குறிப்பிட்டு புதிய களஞ்சிய பதிவேடு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க மீளாய்வாண்டின் | களஞ்சிய பொறுப்பாளரினால் 2021 ஏப்ரல் 09 ஆந் திகதிக்குப் பின்னர் பொருட்கள் பெறுவனவுகளும் வழங்கல்களும் சம்பந்தமான அனைத்து பதிவுகளும் ஏடுகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் பொருள் இருப்புபதிவேட்டினைப் பேணுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முன்னைய மாதம் தொடர்பான கொடுக்கல் வாங்கல் எதுவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையினால் ரூபா 8,544,639,497 தொகை நிலையான வைப்புக்களிலும் குறுங்கால வைப்புக்களும் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக உரிய அமைச்சரின் மற்றும் அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை தேயிலை சபையினால் நிலையான வைப்புக்களில் முதலீடானது உரிய முறைப்படி முதலீட்டுக் குழுவினூடாக பணிப்பாளர் சபைக்கு தெரியப்படுத்தி அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் அரசாங்க வங்கிகளில் மாத்திரம் மிகவும் சாதகமான வட்டி விகிதத்தின் கீழ் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படும். இதற்காக நிதி அதிகாரச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நிதி அமைச்சின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்படவில்லை. | முதலீடு செய்வதற்கு முன்னர் உரிய அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும். |
| (ஈ) | நி.பி 756(9) | வருடாந்தம் பொருள் மீளாய்வு செய்யப்பட்டு முடிவுறுத்தும் கால அட்டவணையின் பிரகாரம் சபை 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு அறிக்கையை அடுத்துவரும் நிதி ஆண்டின் யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 2022 ஒக்தோபர் 31 கணக்காய்வுத் திகதி வரையும் அவ்வாறு நடவடிக்கை | 2021 ஆம் ஆண்டின் பொருள் மீளாய்வு நடவடிக்கைகள் 80 சதவீத அளவில் மேற்கொள்ளப்பட்ட து. காணப்பட்ட எரிபொருள் சிக்கலின் காரணமாக 03 பிராந்திய அலுவலகங்களின் மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த பொருள் மீளாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |

எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.8 வரிப்பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ....................................... | ............................................. | ..................... |
| வியாபார வருமானம் மற்றும் ஏனைய கட்டணங்களை அறவீடு செய்தல் போன்ற வருமானங்களுக்காக வரி விடுதலையினைப் பெற்றுக்கொள்வதற்கு சான்றுகள் இல்லாதிருந்தும் சபையினால் முதலீட்டு வருமானத்தைத் தவிர்த்து அந்த வரியினை ஏனைய வருமானங்களுக்காக வருமான வரியினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் மீளாய்வாண்டிற்காக இலங்கை தேயிலைச் சபையின் முதலீட்டு வருமானத்திற்கான வரிச்செலவு ரூபா 5,344,262 ஆக இருந்தும் நிதிக்கூற்றுக்களில் இலங்கை தேயிலைச் சபைக்குரிய வரிச் செலவாக ரூபா 4,961,057 மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தது. அதற்கிணங்க வரிச் செலவும் செலுத்த வேண்டிய செலவும் ரூபா 383,205 ஆல் குறைத்து செம்மையாக்கப்பட்டிருந்தது. | இலங்கை தேயிலை சபையினால் உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டு வரை வட்டி வருமானத்தின் அடிப்படையில் மாத்திரம் வருமானவரி செலுத்தப்பட்டது. இதற்கு முன்னைய சந்தர்ப்பத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் கூட அரசாங்கத்தின் தொழில்முயற்சிகளின் வரிப் பொறுப்பு தொடர்பாக உறுதியான பதிலை வழங்கியிருக்காததுடன் வரி செலுத்தத் தவறியுள்ளது என்பது கூட அறிக்கையிடப்படவில்லை. எவ்வாறாயினும் உள்நாட்டு இறைவரி திருத்திய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் குறைவாக செம்மையாக்கிய ரூபா 383,205 தொகையான வரிப்பணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு 2022 மே 05 ஆந் திகதி செலுத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துகிறேன். | உள்நாட்டு வருமான வரி அதிகாரச் சட்டத்திற்கு இணங்க வரி செலுத்துவதற்கு தேவையான முயற்சிகள் எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,194,033 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 21,447,654 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 29,641,687 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றதிற்கு அரசாங்கத்தின் மீண்டுவரும் மற்றும் மூலதன மானியங்கள் 30

சதவீதத்தினாலும் ஆய்வுகூட வருமானம் 103 சதவீதத்தினாலும் அதிகரித்தலும் தேயிலை மேம்பாம்பாட்டு மற்றும் சந்தைப்படுத்துதல் வரி நிதியத்தின் வட்டி வருமானத்திலிருந்து தேயிலைச் சபைக்கு மாற்றப்பட்ட பணத்தின் அளவு 70 சதவீதத்தால் அதிகரித்தலும் நிதிச் செலவுகள் 97 சதவீதத்தால் குறைவடைதலும் பிரதான காரணமாக இருந்தன.

## 2.2 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டின் நடைமுறை விகிதம் 1:14 என்ற உயர்ந்த பெறுமதியாகும். பிரசித்தப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் நிதியத்தின் குறுங்கால முதலீடாகிய நிலையான வைப்புக்கள் நடைமுறைச் சொத்துக்களில் 84 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துவப்படுத்துதல் இதற்கு தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................... | .............................................. | ..................... |
| **(அ)** தேயிலை சபையின் 02 ஆம் பிரிவின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2021 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து அருகாமையிலுள்ள ஒரு கட்டிடமும் வாகனங்கள் நிறுத்துவதற்கான ஒரு வெற்றுக்காணியும் ரூபா 100,000 மாதாந்த குத்தகையின் அடிப்படையில் 02 ஆண்டுகள் காலத்திற்காக உடன்படிக்கை செய்யப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் குத்தகைப் பணத்தில் ரூபா 50,000 பெறுமதிக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றுக் காணி உத்தேச குறிக்கோளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க முறையான சாத்தியவள ஆய்வு இன்றி மேற்கொண்ட உடன்படிக்கையினூடாக 02 ஆண்டுகள் காலத்திற்கான ரூபா 1,200,000 பணம் சிக்கனமற்ற செலவாக தேயிலைச் சபையினால் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | தேயிலையின் சுவையை பார்க்கும் அலகினை பேணுதல் ஆபத்தானது என உரிய தொழில்நுட்ப அறிக்கையின் பிரகாரம் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததனால் தேயிலைச் சபைக்கு அருகாமையிலுள்ள கட்டிடத்தினை முறைப்படியாக மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்று வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு 2020 செப்தெம்பர் மாதத்தின் போது திட்டமிடப்பட்டதுடன் அப்போது வரையும் சபையின் சேவையை பெற்றுக்கொள்வதற்கு வருகை தரும் தரப்பினர்களின் வாகனங்களை நிறுத்துவது சம்பந்தமாக காணப்பட்ட சிக்கலினையும் கருத்தில் கொண்டு அக்கட்டிடத்துடன் உள்ள வெற்றுக் காணியையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையினை முன்னிட்டு இக்கட்டிடத்தினை உரிய முறையில் பயன்பாட்டிற்கு | பெறுகை உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது தொடக்க குறிக்கோள் மற்றும் செலவுகளுக்கு ஒப்பீடாக பொருளாதார நலன்கள் தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பெற்றுக்கொண்ட காணியை ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுத்துக்கொள்ள முடியாதிருந்தது. அப்பகுதியினை மீண்டும் உரிமையாளருக்கு விடுவிக்கும் இயலுமை தொடர்பாக கட்டிட உரிமையாளரிடம் விசாரிக்கப்பட்ட போதிலும் 02 ஆண்டுகள் காலத்திற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததனால் அவர் அப்பகுதியினை மாத்திரம் மீண்டும் பொறுப்பேற்பதற்கு நிராகரித்திருந்தார். | |
| (ஆ) | இலங்கை தேயிலைச் சபையின் நுவரெலியா பிராந்திய அலுவலகத்தில் தேயிலை விற்பனை நிலையத்தின் செயற்பாட்டினை ஒப்படைக்கும் ஒப்பந்தம் 6 ஆண்டுகள் காலத்திற்கு ரூபா 8,162,296 குத்தகைப் பணத்திற்கு கொடுப்பனவு செய்யும் இயலுமையினை பரீட்சிக்காது தனியார் தரப்பினர்களுக்கு உடன்படிக்கையின் மூலம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2019 ஆம் ஆண்டிலிருந்து 2021 திசெம்பர் 31 வரையான காலத்தின் போது நுவரெலியா தேயிலை விற்பனை நிலையத்திடமிருந்து சபையினால் அறவிட வேண்டிய ரூபா 2,298,572 குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | 2019 ஆம் ஆண்டிலிருந்து 2021 திசெம்பர் மாதம் வரை அறவிட வேண்டிய பணத்தில் ரூபா 1,312,320 பணம் அறவீடு செய்யப்பட்டுள்ளது. நிலுவைப் பணமாகக் குறிப்பிட்ட ரூபா 986,253 தொகையான குத்தகைப் பணத்தை உரிய வேளைக்கு தீர்த்து வைக்க வில்லையாயின் அறவிட வேண்டிய தண்ட பணமாகும். இந்த மிகைக் கட்டண பணம் சம்பந்தமாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் குத்தகைப் பணத்தை முறைப்படியாக அறவீடு செய்தல் வேண்டும். |
| (இ) | சபையினால் 2003 செப்தெம்பர் 19 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 25,000,000 கடன் பணத்திற்காக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான ஹந்தனையில் அமைந்துள்ள "Ceylaon Tea Museum" இன் உரிமையை பொறுப்பேற்பதற்கு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் தேயிலைச் சபையும் 2012 யூன் | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையுடன் பல்வேறு கலந்துரையாடல்கள் நடைபெற்றிருந்த போதிலும் 2022/05/03 ஆந் திகதிய ஜனவசம நிறைவேற்று உத்தியோகத்தரின் கடிதத்தின் பிரகாரம் நிலுவையான குத்தகைப் பணம் 2001 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் | ஆதனத்தின் உரிமையை பொறுப்பேற்றல் மற்றும் கடன் பணத்தை செலுத்துதல் சம்பந்தமாக உறுதியான இணக்கப்பாட்டினை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 19 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் பணிப்புரையின் பிரகாரம் ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்த போதிலும் இன்றுவரை 09 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அச்செயற்பாடு முடிவடைந்திருக்கவில்லை.<br>Ceylon Tea Museum இன் உரிமையை பொறுப்பேற்றல் மற்றும் கடன் பணத்தை வழங்குதல் சம்பந்தமாக இரு தரப்பினர்களுக்குமிடையே எதுவித உடன்படிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் 2020/492/65 ஆம் இலக்க முகாமைத்துவ சபை தீர்மானத்தின் பிரகாரம் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் தோட்டத்தினது தொழிலாளர் சம்பளத்தை செலுத்துவதற்காக தேயிலைச் சபையினால் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு மீண்டும் ரூபா 10,000,000 கடன் பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,000,000 மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டு வரை கணிப்பீடு செய்யப்பட்டு ரூபா 31.5 மில்லியன் பணத்தை தீர்த்துவைக்குமாறு தெரியப்படுத்தப்பட்டது. அக்கடிதத்திற்கான பதிலாக எங்களால் வழங்கிய கடன் பணத்தை ஒரு அரசாங்க வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருக்குமாயிருந்தால் கிடைக்க வேண்டிய வட்டியை கணித்து அது தொடர்பாக அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. இது சம்பந்தமாக எதிர்காலத்தில் கலந்துரையாடி ஒரு உறுதியான இணக்கப்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதற்கிணங்க தீர்த்துவைக்கும் நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) | சபையினால் 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 211,115,401 செலவு செய்து கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட நுவரெலியா, பண்டாரவளை, இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள 3 காணிகளின் உரிமையை சட்டரீதியாக சபையினால் பொறுப்பேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நுவரெலியா பிராந்திய அலுவலகத்தின் காணியை சுவீகரித்தல் சம்பந்தமாக நுவரெலியா பிரதேச செயலகத்திற்கு 2021-02-16 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட வேண்டுதல் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கிணங்க இந்தக் காணியை சட்டரீதியாக தேயிலை சபையினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பண்டாரவளை மற்றும் இரத்தினபுரி பிராந்திய அலுவலகங்களுக்குரிய காணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதனால் சட்டரீதியாக தேயிலைச் | கட்டிடங்கள் நிர்ணயிக்கப்பட்ட காணிகளின் உரிமையை சட்ட ரீதியாக சபையினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சபையினால் பொறுப்பேற்பதற்கு முடியாதிருந்தது. | |
| (உ) | களுத்துறை பிராந்திய அலுவலகம் செயற்படுகின்ற காணி 2014 ஆம் ஆண்டிலிருந்து 30 ஆண்டுகள் காலத்திற்கு இலங்கை தேயிலைச் சபைக்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு மேல் மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை உரிய அதிகாரியான பாலிந்த நுவர பிரதேச செயலாளருடன் குத்தகை உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டிருக்க வில்லை. | பதுரலிய பிராந்திய அலுவலகம் செயற்படுகின்ற காணி நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது டன் 2021-08-24 ஆந் திகதி குத்தகை உடன்படிக்கையை தயாரித்து அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலகத்தில் காணப்படுகின்ற சில தாமதத்தின் காரணமாக இதுவரை அந்த நடவடிக்கை பூர்த்தியடைந்திருக்கவில்லை. எவ்வாறாயினும் குத்தகை உடன்படிக்கை செய்வதற்காக தொடர்ச்சியாக வேண்டுதல்கள் மேற்கொள்ளப்படுகின்றது என தெரிவிக்கிறேன். | துரிதமாக குத்தகை உடன்படிக்கை செய்து கொள்ளுதல் வேண்டும். |
| (ஊ) | சாத்தியவள ஆய்வின்றி ஆரம்பிக்கப்பட்ட ‘‘ரீமோமன்டிஸ்’’ என்ற பெயரிலான கொழும்பு தேயிலை சந்தைப்படுத்தல் நிலையத்தினை வினைத்திறனான வகையில் அமுல்ப்படுத்தாமையால் ரூபா 62,603,006 நட்டம் ஏற்பட்டமை சம்பந்தமாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு செயலாளரின் 2016 திசெம்பர் 06 ஆந் திகதி தலைவருக்கு விலாசமிடப்பட்ட கடிதத்தின் மூலம் கவனயீனமாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் அதனை கவனிக்காது பணிப்பாளர்கள் சபையினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் பொருத்தமற்றது என தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த நட்டத்தை உத்தியோகத்தர்களிடமிருந்து | ரீமோமன்டீஸ் குழு சந்தைப்படுத்தல் நிலையத்தை உருவாக்குதல் பணப்பாளர் சபையினால் எடுக்கப்படுகின்ற தீர்மானம் என்பதுடன் அதற்கு உத்தியோகத்தர்களின் தலையீடு இடம்பெற்றிருக்கவில்லை. அதன் காரணமாக ஏற்பட்டுள்ள நட்டம் சம்பந்தமாக உத்தியோகத்தர்கள் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இல்லாததனால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் பொருத்தமற்றது என பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது. | இந்த நட்டத்தை உத்தியோகத்தர்களிட மிருந்து அல்லது பணிப்பாளர் சபை அங்கத்தவர்களிடமிருந் து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அல்லது பணிப்பாளர் சபை அங்கத்தவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................... | ........................................... | ..................... |
| (அ) மீளாய்வாண்டின் போது கண்டி ஹந்தானையில் அமைந்துள்ள ''சிலோன் ரீ மியூசியத்தில்'' எதுவித டிக்கட் விற்பனை வருமானமும் இல்லாதிருந்தும் ரூபா 3,000,000 மில்லியன் செலவு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அதனை கடந்த ஆண்டிற்கான செலவுடன் ஒப்பிடுகையில் 41 சதவீத அதிகரிப்பினை சுட்டிக்காட்டுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. இதன் மூலம் இடம்பெறுகின்ற கடமைகள் மற்றும் மேம்படுத்தல்களையும் பிரசித்தப்படுத்தல் பங்களிப்புக்களையும் மீண்டும் மீளாய்வு செய்ய வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது. | இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டும் வரலாற்றுப் பெறுமதியுள்ள ஒரே அரசாங்க நிறுவனம் தேயிலை நூதனசாலை என்பதனால் அந்த நிறுவனம் 2003 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை டிக்கட் விற்பனையின் மூலம் சுயமாக உழைக்கும் வருமானத்தை பேணி வந்ததுடன் ரூபா 11 மில்லியன் நிலையான வைப்பினையும் பேணி வந்தது. எனினும் 2019 ஏப்ரல் மாதம் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் சுற்றுலா கைத்தொழில் துண்டிக்கப்பட்டதோடு சுற்றுலாப் பயணிகளின் வருகையும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. சுற்றுலா கைத்தொழிலினை நல்ல நிலைக்கு கொண்டுவரும் வரை ஆகக் குறைந்த செலவின் கீழ் தேயிலை நூதனசாலையினைப் பேணுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக தேயிலைக் கைத்தொழிலின் பிரதான நிறுவனமான இலங்கை தேயிலை சபையின் மேம்படுத்தல் நிதியத்திலிருந்து குறித்த சில பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | போதியளவு வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு தந்திரோபாயத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். சிலோன் ரீ மியூசியத்தின் செலவுகளை கட்டுப்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான ஐந்து ஆண்டுகள் காலப்பகுதிக்குள் ''இலங்கை தந்திரோபாய வழித் திட்டம்'' இனை அமுல்ப்படுத்துவதற்காக 2011 திசெம்பர் 01 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஏற்றுமதியாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட வரிப்பணத்திலிருந்து ரூபா 8 பில்லியனை ஈடுபடுத்தி ஒரு நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் அந்த நடவடிக்கைக்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 297,890,836 செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்காக உருவாக்கப்பட்ட வியாபார விளம்பரத்தினை ரஷ்யாவின் NTV ஊடகத்தின் மூலம் மாத்திரம் ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் எதிர்பார்த்த ஏனைய 9 நாடுகளில் அந்த விளம்பரம் ஒளிபரப்பப்படவில்லை. மேலும் இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 2019 செப்தெம்பர் மாதம் ரஷ்யாவின் ஒரு தனியார் கம்பனிக்கு ரூபா 29,832,302 தொகை செலுத்தி ரஷ்யா, உக்ரேன் ஆகிய நாடுகளில் ஊடக கருத்தரங்கினை நடாத்துவதற்கும் அதற்கு சமாந்தரமாக தேயிலை ருசி பார்க்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை தவிர மேம்படுத்தல் நிகழ்சித்திட்டத்தில் பொதுமக்களை தொடர்புபடுத்தும் பகிரங்கப்படுத்தல் நடவடிக்கை | 2015 நவம்பர் 06 ஆந் திகதி ஆக்கபூர்வமான தயாரிப்புக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தும் ஊடகத்தை கொள்வனவு செய்வதற்காக ஆலோசனை சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு 2018 மார்ச் 21 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டது. அதற்கிணங்க ரூபா 99,630,039 செலவு செய்து தயாரிக்கப்பட்ட தொலைக்காட்சி வணிக விளம்பரத்தினை ஊடக ஒளிபரப்பிற்காக ஈடுபடுத்துவதற்கு தாமதமடைந்தது. மேற்கூறிய தாமதத்தின் காரணமாக உடன்படிக்கையானது 04 ஆண்டுகள் 06 மாதங்கள் (03 தவணைகளின் கீழ்) நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2019 நவம்பர் 16 ஆந் திகதியின் பின்னர் புதிய கட்டுப்பாடுகளை அதிகார சபையின் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டம் மீண்டும் மீளாய்வு செய்வதற்கு தீர்மானித்து பல்வேறு மட்டங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் புதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக அமைச்சிற்கு தற்பொழுது விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | தேயிலையை மேம்படுத்தலினை முன்னிட்டு தந்திரோபாய வழித்திட்டத்தினை தாமதமின்றி அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இந்து இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) மற்றும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (PSFTA) கீழ் தேயிலைக்காக விருப்புக் கட்டண விகிதம் (Preferential Tariff Rate Quota) காணப்பட்டிருந்தும் அதில் குறிப்பிடதக்க அளவு பயன்பாட்டினை அறிக்கையிடுவதற்கு 2021 ஆம் ஆண்டின் போதும் முடியாதிருந்தது. இந்து இலங்கை மற்றும் பாகிஸ்தான் இலங்கை வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஒரு ஆண்டிற்கு முறையே 15 மில்லியன் கிலோ கிராம் மற்றும் 10 மில்லியனாக கோட்டா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அதில் பயன்படுத்தப்பட்டது முறையே 74,006 கிலோகிராம் மற்றும் 34,710 கிலோகிராம் ஆகிய 0.49 சதவீதம் மற்றும் 0.35 சதவீதம் மாத்திரமாகும். | வருடாந்தம் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற 15 மில்லியன் கிலோகிராம் தேயிலை கோட்டா எல்லை வரை தேயிலையை ஏற்றுமதி செய்வது தொடர்பாக தீர்வை வரியிலிருந்து 50% குறைவு இந்து இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையினூடாக வழங்கப்பட்டிருந்தது. தீர்வை வரியற்ற தடையின் காரணமாக உடன்படிக்கையினூடாக கோட்டாவை உச்ச அளவில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாமை காணப்பட்டதுடன் ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு மில்லியன் கிலோகிராமினை விட குறைந்த அளவிலான தூய்மையான தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் பாகிஸ்தானினால் இலங்கைக்கு தீர்வையற்ற அடிப்படையில் 10,000 மெட்ரிக் தொன் வருடாந்த கோட்டா வழங்கப்பட்டிருந்தும் இலங்கை தேயிலைகளின் விலை மிகவும் உயர்ந்த பெறுமதியில் காணப்பட்டமை, பாகிஸ்தானில் கென்யா தேயிலைக்காக அதிக விருப்பினைக் காட்டியமையின் காரணமாக இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர்கள் இன்றுவரை தீர்வை நலன்கள் தொடர்பான எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படவில்லை. இலங்கை தேயிலை சபை தற்பொழுது இலங்கை தேயிலைக்காக வரி நிவாரணத்தை விசேட நலன்களைப் | சுதந்திர வர்த்தக உடன்படிக்கையிலிருந்து உச்ச அளவு பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு உள்ள தடைகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெற்றுக்கொள்வதற்காக வேண்டுதல் செய்தலானது வணிக திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்பட்டது. | |
| (ஈ) | இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தியும் ஏற்றுமதியும் படிப்படியாக முன்னேற்றமடையாமையால் சர்வதேச தேயிலைக் குழு செய்திக்கான பிற்சேர்க்கையின் (Supplementary to International Tea Committee News Bulletin) பிரகாரம் 2011 ஆம் ஆண்டின் போது இலங்கையின் தேயிலைக்கான உலகளாவிய தேயிலை சந்தையின் பங்கு (World Prod Share) 18 சதவீதமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டளவில் இலங்கையின் தேயிலைக்கான உலகளாவிய தேயிலை சந்தை பங்கு 15 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. | அதற்கிணங்க உலகளாவிய சந்தையில் இலங்கையின் தேயிலைக்கான பங்கு 18 சதவீதத்திலிருந்து 14.6 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்தமையினை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளும் போது அதற்கு நேரொத்த வகையில் உலகளாவிய தேயிலை உற்பத்தியில் மேற்கூறிய வகையில் இலங்கை தேயிலையின் உற்பத்திப் பங்கு 2011 ஆம் ஆண்டின் போது 7 சதவீதமாகக் காணப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் அது 4.4 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. உலகளாவிய தொற்று நோய் நிலைமையின் தாக்கமும் இதற்கான காரணமாகும். | தேயிலை உற்பத்தியையும் உலகளாவிய சந்தையில் தேயிலைக்கான பங்கினையும் அதிகரிப்பதற்கு தரம் வாய்ந்ததான சர்வதேச நியமத்திற்கு இணங்க பொருத்தமான தேயிலைக்காக முதலீட்டினை விரிவுபடுத்துதல் வேண்டும் |
| (உ) | 2021 ஆம் ஆண்டின் இறுதியில் சபையில் பதிவு செய்த மொத்த உள்நாட்டு தேயிலை பொதி செய்பவர்களின் எண்ணிக்கை 1,016 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது புதிதாக பதிவுசெய்த பொதி செய்பவர்களின் எண்ணிக்கை 116 ஆகும். பதிவுசெய்த மொத்த தேசிய பொதி செய்பவர்களுக்கு மத்தியில் 176 பொதி செய்பவர்கள் மாத்திரம் பதிவு செய்தலினை புதுப்பித்திருந்ததுடன் அது மொத்த அளவில் 17 சதவீதமாகும். அதற்கிணங்க உள்நாட்டு தேயிலை பொதி செய்பவர்களின் பதிவினை | பிராந்திய அலுவலக மட்டத்திலும் இலங்கை தேயிலைச் சபையின் மூலமும் நடாத்தாப்படுகின்ற கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களின் போது உள்நாட்டு தேயிலையை பொதி செய்பவர்கள் தேயிலை சபையில் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டுமென பொதுமக்களுக்கு தேசிய பத்திரிகைகளின் மூலமும் அறிவித்தல் வெளியிடப்பட்டன. தேயிலைச் சபையில் பதிவு செய்த எனினும் பதிவு செய்தலினைப் புதுப்பிக்காத அனைத்து பதிவு செய்தல்களையும் இரத்துச் | பொதி செய்பவர்களின் பதிவு செய்தலினை புதுப்பிப்பது சம்பந்தமாக சபையில் போதிளவு மேற்பார்வை செய்து பொதி செய்தலினை நியமதரத்தினைப் பாதுகாத்து பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | புதுப்பிப்பது சம்பந்தமாக சபையின் மேற்பார்வையானது திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | செய்வதற்கும் பிரதான கோவையை நாளதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | இலங்கையின் ஏழு வலயங்களில் உற்பத்தி செய்த தேயிலையை ஏழு சுவைகளில் பொதி செய்வதற்காக சபை சந்திரக்காந்தக் கல் தலைப்பினை பயன்படுத்தி பொதி செய்யும் பெட்டிகள் உருவாக்கப்பட்டிருந்ததுடன் உடபுசல்லாவ வலயத்திற்குரிய 620 வெற்றுப் பொதி பெட்டிகள் அதன் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்தில் இல்லாமையினால் நீக்கப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. ஏனைய வலயங்களுக்குரிய அச்சிடப்பட்ட 4,340 பொதிகள் உரிய கம்பனியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தும் புதிய தலைப்பின் கீழே ஏனைய நிறங்களில் சந்திரகாந்தக் கல் தலைப்பில் பொதிகளை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததனால் மிகுதியான 4,340 அலகுகளின் பொதி செய்தல் இருப்பு களஞ்சியத்தில் விளைவற்றதாகக் காணப்பட்டது. | 07 வலயங்களில் உற்பத்தி செய்த தேயிலை இருப்பின் பொதிகளின் வடிவமைப்பினை மாற்றம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டதானது பொதி செய்பவர்களின் மிகுதி இருப்பு நிலைமையை கருத்தில் கொண்டேயாகும். இதற்கிணங்க புதிய வடிவமைப்பிற்குரிய இருப்பினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளுமாறும் மிகுதி இருப்பினை நீக்குமாறும் அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. | களஞ்சியத்தில் காணப்பட்ட இருப்பினை சிறப்பாக கட்டுப்படுத்தி அழிவுகளும் மோசடிகளும் இடம்பெறும் ஆபத்தினைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு இணங்கியிருக்காததனால் கடந்த காலங்களில் நிராகரிக்கப்பட்ட வெற்று பொதி இருப்புக்கள் அண்ணளவாக 65,035 அலகுகள் அளவிலான இருப்பு பெறுமதியை உரிய தனியார் கம்பனிகளிடமிருந்து சபை மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவீடு செய்திருந்தும் மேலே குறிப்பிட்ட இருப்பினை | இந்த பொதியிருப்பினை துரிதமாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொதிகளை துஸ் பிரயோகம் செய்வதனை தவிர்ப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நீக்கிகொள்வதற்கு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை தேயிலை சபையின் மற்றும் ''சிலோன் டீ'' வியாபாரக் குறியுடனான இந்த நிராகரிக்கப்பட்ட வெற்று பொதிகளின் இருப்பினை சபையின் தலையீட்டுடன் அழிப்பதற்கு அல்லது நீக்கிகொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் இந்த இருப்பினை துஸ்பிரயோகம் செய்யும் இயலுமை காணப்பட்டது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஏ) | தேயிலை சபையினால் 2019 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டுள்ள தேயிலை பயிர்ச் செய்கை காணிகளை இயந்திரங்களை பயன்படுத்தி மாதிரி தேயிலை பயிர்ச் செய்கை காணிகளை தோற்றுவிக்கும் செயற்திட்டத்தின் மூலம் (Model Tea Gardens Project) 4 கட்டங்களின் கீழ் அங்கீகரித்த ஒரு நலன்பெறுனருக்கு ரூபா 1,000,000 தொகையான நிவாரணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். இந்த செயற்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டின் போது 26 மாதிரி தேயிலை பயிர்ச் செய்கை செயற்திட்டங்களுக்காக அங்கீகாரம் மற்றும் பதிவு செய்யும் உரிமை உள்ளதுடன் முதலாவது கட்டத்தில் ரூபா 5,400,000 தொகையான நிவாரணப் பணத்தை வழங்கிய 18 செயற்திட்டங்களின் இரண்டாவது கட்டத்திற்கான நீர் வழங்கல் முறைமையினை ஸ்தாபித்தல் (Installation of Irrigation System) மற்றும் அதனுடன் | முதலாவது கட்டத்திற்காக நிவாரணம் வழங்கப்பட்டுள்ள 18 செயற்திட்டங்களின் நீர் வழங்கல் முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. நீர் வழங்கல் முறைமையினை நிர்மாணித்தல் இச்செயற்திட்டத்தின் 04 கட்டங்களில் ஒரு கட்டமாகும். அக்கட்டத்தினை பூரணப்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் கட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் நிவாரணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சபையின் சிறந்த மேற்பார்வையுடன் செயற்திட்டங்களையும் ஆரம்பித்து வெற்றிகரமாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

தொடர்புபட்ட நடவடிக்கைகளும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் 06 செயற்திட்டங்களில் எதுவித செயல்முன்னேற்றமும் இல்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ...................................... | ............................................ | ..................... |
| (அ) | இலங்கை தேயிலையில் உள்ளடக்கப்பட்டுள்ள Methyl Chloro Phenoxyacetic Acid (MCPA) மீதியை பரீட்சிப்பதற்கு புதிய Liquid Chromatography tandem Mass Spectrometer (LCMS/MS) உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காக தேசிய போட்டி விலையை கோருவதன் மூலம் 2020 நவம்பர் 23 ஆந் திகதி தெஹிவலை பிரதேசத்தில் தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு ரூபா 69,373,510 தொகைக்கு பெறுகை வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் 4.3.2 ஆம் பாந்தியின் பிரகாரம் Liquid chromatography Tandem Mass Spectrometer (LCMC/MS) இயந்திரத்தினை ஸ்தாபிப்பதற்கு பின்னர் ISO 17025 ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்திற்கு இணங்க வணிகரீதியான தேயிலை மாதிரி பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் | ஆய்வுகூடத்திற்கு MCPA பரீட்சிப்பிற்காக அனுப்பிவைக்கப்பட்ட வணிக ரீதியான மாதிரி 2021-07-21 ஆந் திகதியில் பகுப்பாய்வு செய்யப்பட்டு அப்பெறுபேறுகளின் சரியான தன்மை MCPA இற்காக பிரபல்யமான ITI நிறுவனத்திடமிருந்து உறுதிப்படுத்தப்பட்டு அதனையும் அடிப்படையாகக் கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுடன் 2021-07-29 ஆந் திகதி பணிப்பாளரினால் (பகுப்பாய்வு சேவை) கொடுப்பனவு சிபாரிசு செய்யப்பட்டது. தேயிலை சபையினால் உரிய பெறுகைகளை பூர்த்திசெய்து வழங்குனரிடமிருந்து அந்த LCMS/MS இயந்திரத்திற்கு விசேட இரசாயனப் பொருட்கள் 2021 நவம்பர் இறுதிப் பகுதியில் கிடைத்திருந்தது. அதன் பின்னர் 2021 திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து தேயிலை தொழிற்சாலைக்கு ஆய்வுகூட சுற்றறிக்கையின் மூலம் தெரியப்படுத்தப்பட்டு உரிய பரீட்சிப்பினை | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் இயந்திரத்தினை ஸ்தாபிப்பதன் பின்னர் ISO 17025 ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்திற்கு இணங்க தேயிலை மாதிரிகளை பரீட்சித்ததன் பின்னர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் பணத்தை செலுத்தாமை சம்பந்தமாக பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் இயந்திரத்தினை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சிபார்சின் அடிப்படையில் 50 சதவீதமானது இரண்டாவது முற்பணம் செலுத்த வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் வணிக ரீதியான மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு பரீட்சிப்பு அறிக்கையினை வழங்குதல் 2021 திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது டன் அதற்கு முன்னர் கேள்வி உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு முரணாக கேள்விப் பெறுமதியில் 50 சதவீதமான ரூபா 34,917,055 பணம் 2021 ஆகஸ்ட் 10 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இயந்திரம் அதிக இயளலவினைக் கொண்டிருந்த போதிலும் 2022 மே 25 ஆந் திகதியளவில் இந்த இயந்திரத்தினைப் பயன்படுத்தி 27 MCPA பரீட்சிப்புக்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டன என்பது கணக்காய்விற்கு தெரியப்படுத்தப்பட்டது. தொழிற்சாலையில் காணப்பட்ட ஆய்வுகூட பரீட்சிப்பு தேவைப்பாடு போதியளவானதாக மற்றும் தாமதமின்றி நிறைவேற்றப்படாது பயன்பாடு குறைந்த மட்டத்தில் காணப்பட்டிருந்தும் எப்போதும் வாயு சீராக்கல் நிலைமையின் கீழ் உயர்ந்த செலவினை மேற்கொண்டு இந்த இயந்திரம் பராமரிக்கப்பட வேண்டுமெனவும் மேலும் அவதானிக்கப்பட்டது.

வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டது. மேற்கூறிய உபகரணத்தைப் பயன்படுத்தி MCPA களுக்கு மேலதிகமாக மேலும் தடைகளை பரீட்சிக்க கூடியதாக இருந்ததுடன் தேயிலை தொழிற்சாலைகளின் வேண்டுதல்களின் அடிப்படையில் அடிக்கடி அப்பரீட்சிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுகூடத்தில் தற்பொழுது காணப்படுகின்ற நிரந்தர பதவிகளுக்கான ஊழியர் வெற்றிடங்களை நிரப்பியதன் பின்னர் மற்றும் உரிய விசேடத்துவமான ஆய்வுகூட பொருட்கள் அனைத்தும் இறக்குமதி செய்யக் கூடியதாக இருப்பதனால் அப்பொருட்களை இறக்குமதி செய்வதற்காக வழங்குனர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள வெளிநாட்டு ஒதுக்கம் தொடர்பான சிக்கல் தீர்த்துவைக்கப்பட்டதன் பின்னர் உரிய உபகரணங்களை முழுமையான பாவனைக்கு உட்படுத்தக்கூடியதாக இருக்கும்.

(ஆ) எதிர்பார்த்த பொருள் விபரக் குறிப்புக்களுக்கு இணங்கியிருக்காமையின் காரணமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்

முறைப்படியாக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் விசாரணை அறிக்கை நிறுவனத்திற்கு

இலங்கை தேயிலை சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்களிடமிருந்து

| | | |
|---|---|---|
| கொள்ளப்படாதிருந்த 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 32,132,088 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட Liquid Chromatography Mass Spectrometer இயந்திரத்தினை கொள்வனவு செய்த போது இடம்பெற்ற ஒழுங்கீனங்கள் தொடர்பாக அப்போது ஆய்வுகூடத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டு சேவையாற்றிய உதவிப் பணிப்பாளருக்கு எதிராக குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டிருந்தும் முறைப்படியாக ஒழுக்காற்று பரீசீலினைகளை முடிவுறுத்தி இலங்கை தேயிலை சபைக்கு ஏற்பட்ட நட்டத்தை பொறுப்புகுக்கூறக்கூடிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைத்திருந்ததுடன் அந்த அறிக்கை 2022-07-08 ஆந் திகதி நடைபெறும் பணிப்பாளர் சபை கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| ...................................... | ............................................. | ..................... |
| இலங்கை தேயிலைச் சபைக்குச் சொந்தமான கிரயம் ரூபா 1,800,000 வீதமான இரண்டு கெப் வாகனங்கள் 2017 நவம்பர் 28 ஆந் திகதி தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்கு பயன்படுத்துவதற்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் 2022 ஏப்ரல் 30 கணக்காய்வுத் திகதி வரை பணத்தை அறவிட்டு மேற்கூறிய வாகனங்களின் சட்ட ரீதியான உரிமையை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போதும் சபையின் போக்குவரத்து தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக ரூபா 2,204,213 செலவு செய்து தனியார் வாடகை | பெருந்தோட்ட அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்கு இணங்க உரிய இரண்டு வாகனங்களும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினால் மதிப்பீட்டு பெறுமதியைச் செலுத்தி பூர்த்திசெய்ததன் பின்னர் அதன் உரிமையை ஒப்படைப்பதற்கு உட்பட்டு அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. 2022/06/01 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் மேற்கூறிய 02 வாகனங்களுக்கு தவணை ரீதியாக பணத்தை செலுத்துமாறு தெரியப்படுத்தி | பணத்தை அறவிட்டதன் பின்னர் மாத்திரம் வாகனங்களின் உரிமையை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | தேசிய பெருந்தோட்ட முகாமைத்து நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. |

**3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................... | ............................................ | .................... |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரித்த பதவியணியினர் 328 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 262 ஆகும். அதற்கிணங்க உயர் முகாமைத்துவ மட்டத்திற்குரிய பிரதிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்), பணிப்பாளர் (அபிவிருத்தி) மற்றும் பணிப்பாளர் (நிருவாகம்) ஆகிய 03 பதவிகள் (02 ஆண்டுகளுக்கும் 06 மாதங்களுக்கும் இடையே) உள்ளடங்கலாக வெற்றிடமான 66 பதவிகள் காணப்பட்டதுடன் அவற்றினை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புதல் அரசாங்கத்தின் மூலம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதனால் வெற்றிடமாக காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................... | ............................................ | ...................... |
| இலங்கை தேயிலை சபையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் செயல்முன்னேற்றத்தின் பிரகாரம் சபையின் ரூபா 525 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட மூன்று செயற்பாடுகளின் நிதி செயல்முன்னேற்றம் 09 சதவீதத்திற்கும் 37 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டதுடன் பௌதீக செயல்முன்னேற்றம் 0 சதவீதத்திற்கும் 22 சதவீத்திற்கும் இடைப்பட்டதான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது என்பது | அடுத்துவரும் ஆண்டிலிருந்து உறுதியாக பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்களை தனித்தனியாக இனங்கண்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ரூபா 525 மில்லியன் தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்ட மூன்று செயற்பாடுகளின் நிதி செயல்முன்னேற்றம் குறைவடைவதற்கான காரணம் தெளிக்கும் நீர் வழங்கல் | செயல்நடவடிக்கைத் திட்டம் சம்பந்தமாக போதியளவு செயல்முன்னேற்றத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான பொறுப்புக்களை உரிய முறைப்படி ஒப்படைப்பதற்கும் காலாண்டு ரீதியான சிறந்த மேற்பார்வையினை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அவதானிக்கப்பட்டது.
மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்டு சரியாக தேயிலைக் கொழுந்துகளை பிடுங்குதல் தொடர்பாக தெரியப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம், இயந்திர ரீதியாக தேயிலை கொழுந்துகளை பிடுங்குதல் மற்றும் தேயிலை தொழிற்சாலைகளில் சூரிய மின்சக்தி முறைமையை ஸ்தாபித்தல் ஆகிய 14 செயற்பாடுகளின் பௌதீக செயல்முன்னேற்றமானது அதன் இலக்கிடப்பட்ட பௌதீக செயல்முன்னேற்றத்தினை விட 50 சதவீதத்திற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் போது ரூபா 325 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட 2 செயற்திட்டங்கள் தொடர்பான பௌதீக செயல்முன்னேற்றம் சமர்ப்பிக்கப்படாததுடன் அதில் ரூபா 210 மில்லியன் தொகையான செயற்பாடுகளுக்கான நிதி செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

செயற்திட்டத்திற்காக 3 ஆவது காலாண்டின் போதே அங்கீகாரம் கிடைத்துள்ளதனால் நீர் வழங்கல் முறைமையை ஸ்தாபிப்பதனை முடிவுறுத்துவதற்கு ஊடகங்களினூடாக திட்டமிடப்பட்ட உலகளாவிய மேம்பாட்டு நடவடிக்கைகள் தடைப்பட்டதன் காரணமாக அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் செலவு இடம்பெறாமை வர்த்தக கண்காட்சிகள் இரத்துச்செய்யப்பட்டமை மற்றும் பிற்போடப்பட்டமை என்பவற்றின் காரணமாக இலக்கிடப்பட்ட நிதி மற்றும் பௌதீக செயல் முன்னேற்றத்தினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.
மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளின் எதிர்பார்த்த இலக்கினை அடைந்துகொள்வதற்கு முடியாமைக்கு பிரதானமாக கொவிட் -19 தொற்று நோய் நிலைமையின் ஆட்கள் ஒன்றுசேர்வதற்காக தடை காரணமாக இருந்தது. தேயிலை தொழிற்சாலைகளில் சூரிய மின்சக்தியை உற்பத்திசெய்யும் தொடக்க நடவடிக்கை தாமதமடைந்துள்ள போதிலும் தற்பொழுது உரிய கொடுப்பனவு நடவடிக்கையானது 50 சதவீதத்தினை விட அதிக அளவில் முடிவடைந்துள்ளது. சூரிய மின்சக்தி முறைமையை ஸ்தாபிப்பதற்காக வேண்டிக்கொள்பவர்கள் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை

செயல்முன்னேற்றம்
குறைவடைந்தமைக்கு
காரணமாக இருந்தது.